ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2463/06 - 2025 නොවැම්බර් මස 17 වැනි සඳුදා - 2025.11.17

*2463/06 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

### (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(அ) ஆம் பிரிவின் கீழ் மண்முனை தெற்கு மற்றும் எருவில் பற்று பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்

மண்முனை தெற்கு மற்றும் எருவில் பற்று பிரதேச சபை, உறுப்பினர் ஒருவரின் பதவி, உறுப்பினராக உள்ளமை இல்லாதொழிந்துள்ளதன் காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும்;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(அ) ஆம் பிரிவின் கீழ், மண்முனை தெற்கு மற்றும் எருவில் பற்று பிரதேச சபையின் இலக்கம் 09 - கோட்டைக்கல்லாறு வட்டாரத்திற்கு தெரிவு செய்யப்பட்ட தருமரெத்தினம் சுதாகரன் என்பவர் அங்கம் வகிக்கின்ற தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான மண்முனை தெற்கு மற்றும் எருவில் பற்று பிரதேச சபையின் இலக்கம் 09 - கோட்டைக்கல்லாறு வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக நிறோஜினி கலைவாணன் என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

மண்முனை தெற்கு மற்றும் எருவில் பற்று பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான நாகலிங்கம் ரேகன் ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66அ(1)(அ) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு நிறோஜினி கலைவாணன் என்பவர் மண்முனை தெற்கு மற்றும் எருவில் பற்று பிரதேச சபையின் இலக்கம் 09 - கோட்டைக்கல்லாறு வட்டாரத்தின் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**என். ரேகன்,**
தெரிவத்தாட்சி அலுவலர்
மண்முனை தெற்கு மற்றும் எருவில் பற்று பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
மட்டக்களப்பு,
2025, நவெம்பர் 17.

EOG 11 - 0125